Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 22 | 05-04-2003 | சனிக்கிழமை | ஓசை 46

அழகன் ஒப்செற் பதிப்பகம்

வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களையும்

- தரமான முறையில்
- கணினி முறையில்
- குறித்த தவணையில்

செய்து கொள்ள வேண்டிய ஒரே பதிப்பகம்.

யாழ். சாலை, கிளிநொச்சி.

# வாஷிங்டன் மாநாட்டிற்கு அழைக்காமை ஏமாற்றம் தருவதாக அமைந்துள்ளது!

## தமிழீழ அரசியல்துறை நடுவப்பணியகம் அறிவிப்பு

**அமெரிக்க அரசாங்கத்தின் அனுசரணையுடன் வாஷிங்டனில் நடைபெறவிருக்கும் நிதி வழங்கும் நாடுகள் மாநாட்டுக்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருப்பது தங்களுக்கு ஏமாற்றத்தைத்தருவதாக அமைந்திருக்கிறது என்று விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.**

இதுகுறித்து தமிழீழ அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இருந்து நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே விடுதலைப்புலிகள் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இரண்டு தரப்பினருக்கும் இடையே சமமானதும், இணையான பிரதிநிதித்துவமும் எனும் அடிப்படையிலேயே இத்தகைய நிதி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அந்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இச்செயலானது வருங்காலச் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் எனத் தெரிவிக்கும் விடுதலைப்புலிகளின் அறிக்கையானது,

இருதரப்பிற்கும் இடையில் மத்தியஸ்தராகக் கடமையாற்றும் நோர்வே அரசின் தீர்மானத்தின்படி சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் புனர் அமைப்பிலும்,

(10ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோர்களுக்காக
## 60 லட்சம் யூரோக்கள் ஐரோப்பிய யூனியன் உதவி

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெயர்ந்து வசிப்பவர்களுக்கும், தமிழ் நாட்டில் இருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கும் உதவும் வகையில் அறுபது இலட்சம் யூரோ நாணயத்தை ஐரோப்பிய ஆணைக்குழு உதவியாக வழங்கவுள்ளது.

மிதிவெடிகளின் அபாயம் பற்றி ஆறு இலட்சத்து பத்தாயிரம் மக்களுக்கு அறிவுறுத்தவும், தேவைப்படும் மக்களுக்கு அவசர உதவி வழங்கவும் இந்தத் தொகை வழங்கப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள முகாங்களில் வசிக்கும் 65000 தமிழ் அகதிகளுக்குத் தொடர்ந்து மனிதாபிமான உதவி வழங்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இந்த உதவித் திட்டம் பன்னிரண்டு மாத காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாண மக்களுக்கு உதவு

(10ஆம் பக்கம் பார்க்க)

## பொதுசன வாக்கெடுப்பு
## அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து விடுதலைப்புலிகள் தரப்பில் அதிருப்தி

சமாதானத் தீர்வுத் திட்டம் தொடர்பாக சிறிலங்கா அரசு நடாத்தத் தீர்மானித்துள்ள பொதுசன வாக்கெடுப்பு குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஆச்சரியமும், ஏமாற்றமும் தெரிவித்துள்ளார்.

இவ் வாக்கெடுப்புப் பற்றி அமைச்சர் பீரிஸ் விடுத்த அறிவிப்பானது எமக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும், ஏமாற்றத்தையும் தருகின்றது எனத் தெரிவித்துள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பொதுசன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து முன்னர் ஒரு தடவை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் எம்மிடம் பிரஸ்தாபித்திருந்தார். அப்போதே அது சரிப்பட்டு வராது என்பதையும் அதற்குரிய நேரம் இன்னமும் வரவில்லை என்றும் நாம் அவருக்கு தெளிவாக எடுத்துரைத்திருந்தோம். ஆனால் அதற்குப் பின்னர் இப்போது எம்முடன் கலந்து ஆலோசித்து இணக்கம் எதுவும் காணாது, ஒரு தலைப்பட்சமாக பொதுசன வாக்கெடுப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினரின் நிபந்தனை மீனவர்களைப் பெரிதும் பாதிக்கும்!

அனுமதி அட்டைகளைப் பெற்றே மீன்பிடித்தொழிலில் ஈடுபடவேண்டும் என்ற சிறிலங்கா கடற்படை விடுத்துள்ள அறிவிப்பானது எமது கடற்றொழிலாளர்களை பெரிதும் பாதிக்கும் என மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்

அனுமதி அட்டைகளைப் பெற்று மீன்பிடித்தொழிலில் ஈடுபடவேண்டும் என்ற அறிவிப்பினை சிறிலங்கா கடற்படை நேற்று முன்தினம் வெளியிட்டி

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு ரூபா அதிகரிப்பு

ஈழநாதம் நாளேட்டின் விலை இன்று முதல் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்படுகிறது என்பதனை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். இதன் படி இன்று முதல் நாளேட்டின் விலை ஏழு ரூபாவாக இருக்கும்.

## ஊர்தி உரிமையாளர்கள் கவனத்திற் கொள்ளவும்!

2003ஆம் ஆண்டுக்கான மோட்டார் ஊர்தி வரியட்டை, இலக்கத்தகடு இன்றி மோட்டார் ஊர்திகளை வீதிகளில் பயன்படுத்துபவர்கள் மீது தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதியினரால் நடவடிக்கை எடுக்கப்படுமென மீண்டும் ஒருமுறை ஊர்த்திப் பதிவுப் பகுதியினரால் அறியத்தரப்பட்டுள்ளது.

## கண்ணிவெடி அகற்றும் பயிற்சியை பூர்த்தி செய்தோருக்குச் சான்றிதழ்

(வவுனியா)

கண்ணிவெடி அகற்றும் பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வவுனியாவில் நேற்று நடைபெற்றது. சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் வன்னிப் பகுதியில் கண்ணிவெடியை அகற்றும் நோக்குடன் பயிற்சிநெறி வழங்கப்பட்ட 40 பேருக்கு பயிற்சிநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தமையால் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா சுந்தரபுரம் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவுப்பணிப்பா

(10ஆம் பக்கம் பார்க்க)

## பெண்கள் உபகுழு மாநாட்டில்
## படையினரின் சோதனைச்சாவடிகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்காப் படையினரின் தடைமுகாங்கள், சோதனைச் சாவடிகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் நேற்று கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழுவின் இரண்டாவது மாநாட்டின் முதல் நாள் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு இரவு 7.00 மணி வரை இடம் பெற்றது.

நேற்று நடைபெற்ற உபகுழு மாநாட்டில் சிரான் செயலகப் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் அவர்கள் சிரான் செயற்பாடுகள் பற்றியும் அதன் கட்டமைப்புக்கள் பற்றியும் இரு தரப்பினருக்கும் விளக்கமளித்துள்ளார்.

இச்சந்திப்பில் கிளிநொச்சியில் பெண்கள் விவகாரத்துக்கான செயலகம் ஒன்றினை அமைப்பது பற்றியும் கொழும்பில் பெண்கள் விவகாரத்துக்கான அலுவலகம் அமைப்பது பற்றியும் முதலாவது பெண்கள் விவகாரத்துக்கான உபகுழு மாநாட்டில் முன்வைக்

(10ஆம் பக்கம் பார்க்க)



பெண்கள் உபகுழு மாநாடு

## வரி விளம்பரம்

### பணம் தவறிவிட்டது

02.04.2003 புதன்கிழமை பி.ப 3.30 இற்கும் 4.00 மணிக்கும் இடையில் துணுக்காய் வைத்திய சாலை முன்வாசலில் சிறு தொகைப் பணம் தவறிவிட்டது. அப்பணத்தைக் கண்டெடுத்தவர்கள் துணுக்காய் வைத்திய சாலையில் ஒப்படைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2917)

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள யமகா 80 சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் சிறிலங்கா, தமிழீழ புத்தகங்களுடன் விற்பனைக் குண்டு. தொடர்புக்கு: யோன் கல்வி நிலையம், முல்லை வீதி, புதுக்குடியிருப்பு. (2826)

### தவறிவிட்டது

செல்லையா தெட்ணாமூர்த்தி ஆகிய நான் எனது தேசிய அடையாள அட்டையும் மற்றும் இராணுவ தொழில் அறிமுக அட்டையும் கிளிநொச்சிக்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3062)

### கண்டெடுப்பு

பொன்னாலை சுழிபுரம் என்னும் முகவரி கொண்ட முத்துக்குமாரசாமி சிறிதரன் என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும். (26)

# கோரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை திறக்க முழங்காவில் அமைப்புகள் கோரல்

**கிளி. அரசாங்க அதிபரிடம் மகஜர்**

கோரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை உடன் திறக்க முழங்காவில் பிரதேச அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இது தொடர்பான மகஜரை கிளி. அரச அதிபரிடம் முழங்காவில் பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றிய செயலாளர் கௌரி சங்கர் கையளித்தார். பொது அமைப்புக்களின் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இப்பாதை மூடப்பட்டுள்ளதால் மன்னார்ப்பகுதி மக்கள் உட்பட முழங்காவில் பிரதேச மக்கள் மற்றும் பூநகரி பிரதேச மக்கள் யாழ். குடாவிற்கு நீண்ட தூர பயணத்தை செய்யவேண்டியுள்ளது. மற்றும் முழங்காவில் பிரதேச விவசாயிகள் தமது விளை பொருட்களை யாழ். குடாவிற்கு எடுத்துச்சென்று சந்தைப்படுத்த முடியாது உள்ளது. மற்றும் பொருளாதார தாக்கங்கள் இப்பாதை மூடப்பட்டுள்ளதனால் ஏற்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பாதையை திறக்குமாறு முழங்காவில் பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியம் நாச்சிக்குடா முழங்காவில் வர்த்தக சங்கம், குமுழமுனை மாதர் அமைப்பு, ஒயாமாரி கமக்கார அமைப்பு, கிராம அபிவிருத்திச் சங்கம், சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம், முழங்காவில் கிராம அபிவிருத்திச் சங்கம், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு, நாகபடுவான் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அமைப்பு, கிளி. முழங்காவில் பழைய மாணவர் சங்கம், 31ஆம் கட்டை ஸ்ரீ முருகன் ஆலய நிர்வாக சபை, முழங்காவில் அம்பாள் ஆலய வழிபடுவோர் சபை, விநாயகர் விளையாட்டுக் கழகம் என்பன கோரியுள்ளன.

**கிளி. மத்திய கல்லூரியில்**

# இலவச மருத்துவ சிகிச்சை இன்றும் நடைபெறும்


(அலுவலக செய்தியாளர்)

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிமனையினரால் நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரியில் விசேட இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் பெருமளவு மக்கள் பயன்பெற்றனர்.

கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்திய மூர்த்தி தலைமையில் நடைபெற்ற சிகிச்சை முகாம் ஆரம்ப கேசம்பிள்ளை நன்றியுரை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அநுராதபுரம் மாவட்டங்களிலிருந்து வருகை தந்த விசேட வைத்திய நிபுணர்களின் இலவச மருத்துவ சிகிச்சைகள் இடம்பெற்றன.

நேற்றுக் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற்ற இச்சிகிச்சை முகாமில் சிறுவர், முதியோர் மற்றும் நோயாளர்கள் பெருமளவில் சிகிச்சை பெற்றனர்.



நிகழ்வில் சிறப்பு வைத்திய நிபுணர்களின் மங்கல விளக்கேற்றலினைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் அருண் ஏற்றி வைத்தார். வரவேற்புரையினை கிளி. மாவட்ட பி.மா.சு.சே.பணிப்பாளர் நிகழ்த்தினார். சிறப்புரையினை வைத்தியக் குழுவிற்குத்தலைமை தாங்கி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர். நிகால் ஜயதிலக நிகழ்த்தினார். பிரதேச மருந்தாளர் வி.முரு

பொது மருத்துவம், சத்திர சிகிச்சை, கண்பரிசோதனை, காது, மூக்கு, தொண்டைக்கான மருத்துவ சேவை, சர்மவியாதி, எக்ஸ் கதிர்சேவை, ஆய்வுகூட பரிசோதனை, பல் வைத்தியம், மகப்பேற்று வைத்தியம் என்பன அந்தந்த நோய்களுக்கான துறை சார்ந்த விசேட வைத்திய நிபுணர்களால் வழங்கப்பட்டன.

இன்றும் காலை 9.00 மணி முதல் பி.ப 1.00 மணிவரை மேற்படி இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

திருமுறிகண்டி ஆலயப் பகுதியில் சில தேசிய அடையாள அட்டைகள், பாடசாலை அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு முறிகண்டி வர்த்தக சங்கத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பரமேஸ்வரி வேலுப்பிள்ளை முள்ளியவளை (407302281V), ஜெனகன் யசோதரன் யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம் (0905009004 சி.பூ.(410690230) கறுப்பண்ணன் செல்லத்துரை ஜெயபுரம் வடக்கு (091501330) முருகேசபிள்ளை மதிசிந்துஜா கிளி/பளை மத்தியகல்லூரி, மதிசிந்துஜா (846722327V) பளை ஆகியோரது தேசிய அடையாள அட்டைகளையும் பாடசாலை அடையாள அட்டையும் முறிகண்டி வர்த்தக சங்கத் தலைவரிடம் பெற்றுக்கொள்ளவும். (பா)

# மின் உற்பத்தித்திட்ட திறப்புவிழா இன்று

(அலுவலக செய்தியாளர்)

பொருணமிய மதியுகத் தினரின் மின் உற்பத்தித் திட்ட திறப்புவிழா இன்று இடம்பெறவுள்ளது. வட்டக்கட்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் இன்று நண்பகல் 12.00 மணிக்கு மேற்படி மின் உற்பத்தித் திட்ட திறப்பு விழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கட்டாக்காலி நாய்களால் பலருக்குப் பாதிப்பு!

கண்டாவளை பிரதேசத்தில் உள்ள மயில்வாகனபுரம் கிராமத்தில் கட்டாக்காலி நாய்களால் கடியுண்ட நான்கு பேர் புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் கடந்தவாரம் சிகிச்சை பெற்றுள்ளனர். இக்கிராமத்தின் அண்டிய கிராமமான கொழுந்துப்புலவு நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களால் வளர்க்கப்பட்டு கைவிடப்பட்ட கட்டாக்காலி நாய்களினால் பாடசாலை மாணவர்கள், மக்கள் என பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதனுடன் இந்நாய்கள் இரவு வேளைகளில் மயில்வாகனபுரம் பகுதி வளர்ப்பு நாய்களுக்கு கடித்து வருவதாகவும், இதனால் பல நாய்களுக்கு விசர்நோய் ஏற்பட்டிருக்கலாம் எனவும் மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர் அ.நாகேந்திரன், அ.சிவகுமார், ந.வாணி ந.அரவிந்தராஜ் ஆகியோரே கட்டாக்காலி நாய்க் கடிக்கு இலக்கானவர்கள் ஆவர். இதன் விளைவாக இப்பகுதி கிராம சேவகர் எஸ்.எஸ். சின்னத்தம்பி கண்டாவளை பிரதேச செயலரை கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளருடன் தொடர்பு கொண்டு கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார். (14)

# இலவச பற்சிகிச்சை முகாமில் 400 பேருக்குச் சிகிச்சை

(கண்டாவளை)

வன்னிப்பகுதி மக்கள் நலன் கருதி கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் த.சத்தியமூர்த்தி அவர்களின் வேண்டுதலின் பேரில் வவுனியா மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் கேதீஸ்வரன் அவர்களின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட நடமாடும் பல் வைத்திய சேவையினர் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் முறையாக நான்கு இடங்களில் பற் சிகிச்சை முகாம் நடத்தியுள்ளனர். இச் சேவையில் பெருமளவு மக்கள் பற்சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். கடந்த 31 ஆம் திகதி கிளிநொச்சி கட்டம் 1 வைத்திய சாலையில் 62 பேரும், முதலாம் திகதி பளை வைத்தியசாலையில் 45 பேரும், 2ஆம் திகதி பூநகரி அரசினர் வைத்தியசாலையில் 125 பேரும், 3ஆம் திகதி தருமபுரம் வைத்தியசாலையில் 150 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இப்பற்சிகிச்சையை பற்சிகிச்சை நிபுணர்கள் செல்வி நல்லதம்பி சுசிலலோஜினி, செல்வி செல்வராஜா சுபாஜினி ஆகியோர் மேற்கொண்டனர் (14)

### உலர் உணவு நிவாரணம்

கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள பிரமந்தனாறு கிராமத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கானதை மாத உலர் உணவு அனுமதிப்பத்திரம் கிராமசேவகர் அலுவலகத்தில் வைத்து கிராம சேவகர் எஸ்.எஸ். சின்னத்தம்பியினால் வழங்கப்பட்டு வருகிறது. எனவே அனைவரையும் 07.04.2003 ஆம் திகதிக்கு முன் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது எனவும் கிராம சேவகர் அறிவித்துள்ளார். (14)

### வருடாந்த உற்சவம்

(அலுவலக செய்தியாளர்)

அருள்மிகு இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலய வருடாந்த திருவிழா நாளை மறுதினம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ள இவ்விழாவின் 15ஆம் திகதி இரதோற்சவம் நடைபெற்று 16ஆம் திகதி தீர்த்த உற்சவமும், 17ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (சோ)


**கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்**

**01-07.04.2003**

அறியாத வெடிபொருட்கள் எந்நேரமும் வெடிக்கலாம்

அவைகளைத் தொடவோ ஆராய்ச்சி செய்யவோ முயற்சிக்காதீர்கள்.

யுனிசெப்-வெண்புறா நிறுவனம்

(சி8043)

# அதிக குழந்தைகளுக்கு மரண தண்டனை வழங்கிய நாடு அமெரிக்காவே

## சீனாவின் ம. உ. குறித்த அறிக்கை தெரிவிப்பு

**உலகிலேயே குழந்தைகளை அதிகமாக மரண தண்டனைக்கு உட்படுத்தியிருக்கும் நாடு அமெரிக்கா என்றும் அங்கு மூன்று கோடி மக்கள் பசிக் கொடுமையால் வாடுவதாகவும் சீனா வெளியிட்டுள்ள மனித உரிமை மீறல்கள் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2002ஆம் ஆண்டு அமெரிக்காவில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் குறித்த அறிக்கை ஒன்றினை சீனா வெளியிட்டுள்ளது.

ஆண்டு தோறும் ஏப்ரல் 01ஆம் திகதி உலக நாடுகளின் மனித வுரிமை குறித்த அமெரிக்க அரசு அறிக்கை வெளியிட்டு வருவதன் தொடர்ச்சியாக இவ் ஆண்டு சீனா 190 நாடுகள் பற்றிய அறிக்கையை வெளியிட்டுள்ளது. பல்வேறு உலக நாடுகள் குறித்து மனிதவுரிமைகள் அறிக்கை வெளியிடும் அமெரிக்கா தன்னுடைய நாட்டின் மனிதவுரிமைகள் குறித்து எந்தவொரு அறிக்கையையும் வெளியிடுவதில்லை எனக் குறிப்பிட்டே சீனா இத்தகைய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இவ் அறிக்கையின் படி அமெரிக்காவில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 99 சத வீதமானவர்கள் அப்பாவிகள் எனப் பின்னர் நிலைநாட்டப்பட்டிருப்பதாகவும் குழந்தைகளை அதிகமாக மரணதண்டனைக்கு உட்படுத்தியிருக்கும் நாடு அமெரிக்கா எனவும் தெரிவிக்கின்றது. அமெரிக்காவில் மூன்று கோடி மக்கள் பசிக் கொடுமையில் வாடுவதாகவும், 30 லட்சம் மக்கள் வீடற்றவர்களாக இருப்பதாகவும் இவ் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.




பிரான்ஸ் தலைநகரில் நகர மண்டபத்தின் முன்னால் "யுத்தத்திற்கெதிராக பாரிஸ்" எனும் வாசகம் காணப்படுகிறது.




யுத்தத்திற்கு எதிரான அமைப்பொன்று வாஷிங்டனில் நடத்திய சமாதான ஊர்வலம்.

## அமெரிக்கச் சிப்பாய் பலி

ஈராக்கின் மத்திய பகுதியிலுள்ள கொட் நகரிற்கு அருகே மிக்கிரியில் இருந்த அமெரிக்கப் படைச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி எதிர்பாராமல் வெடித்ததில் அவர் இறந்துள்ளார் என கட்டாரிலுள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.



ஈராக்கிய ஆளும் "பாத்" கட்சி அங்கத்தவர்கள் துப்பாக்கிகளை உயர்த்தியவாறு அணிவகுத்து செல்கின்றனர்.

# மேற்குக் கரையில் 7 பலஸ்தீனியர்கள் இஸ்ரேலியப் படைகளால் சுட்டுக்கொலை

மத்திய கிழக்கின் மேற்குக் கரை மற்றும் காஸா நிலப்பரப்பில் இஸ்ரேலியர்கள் நேற்று முன்தினம் ஏழு பலஸ்தீனர்களை சுட்டுக்கொன்றுள்ளனர்.

சர்வதேச சமூகத்தின் பார்வை ஈராக்கிய யுத்தத்தின் பக்கம் திரும்பியுள்ள நிலையில் இஸ்ரேல் இவ்வாறு முற்றுகையைத் தீவிரப்படுத்தியுள்ளதாக பலஸ்தீன அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர். எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இதனிடையே மத்திய கிழக்கில் சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப் படும் என அமெரிக்க ராஜாங்க அமைச்சரான கொலின் பவல் கூறியுள்ளார்.



பலஸ்தீனத்தில் நடந்த ஈராக்கிற்கு ஆதரவான ஊர்வலம்.

## கண்ணிவெடியில் ஒலிப்பதிவாளர் பலி

ஈராக்கில் நிலக்கண்ணி வெடியில் சிக்கி பி.பி.ஸி. ஒலிப்பதிவாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் மேலும் 02 பி.பி.ஸி நிருபர்கள் காயமடைந்துள்ளனர்.

## ஐவரிக் கோஸ்ட் அரசாங்கத்தில் கிளர்ச்சியாளர் பங்கேற்பு

ஐவரிக்கோஸ்டில் முதற் தடவையாக நேற்று முன்தினம் கிளர்ச்சிவாதிகள் அதிகாரப் பகிர்வு அடிப்படையிலான அரசாங்கத்தில் பங்கெடுத்துள்ளனர்.

ஆறு மாதகாலமாக அங்கு நடைபெற்று வந்த தாக்குதல்களினால் பிளவுபட்டுள்ள ஐவரி கோஸ்டை ஒன்றிணைப்பது இந்த அதிகாரப் பகிர்வு அரசாங்கத்தின் நோக்கமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு முன்னர் இத்தகைய அமைச்சரவைக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட போதும் மூன்று கிளர்ச்சிவாதக் குழுக்கள் அவற்றில் பங்கு பற்றுவதற்கு மறுத்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக் மீதான யுத்தத்திற்கென 8000 கோடி டொலர் ஒதுக்கீடு

### – அமெரிக்க செனட்சபை அங்கீகரித்தது

ஈராக் மீதான யுத்தத்தில் பயன்படுத்துவதற்காக 8000 கோடி டொலரை வழங்கும் பிரேரணையை அமெரிக்க செனட் சபை அங்கீகரித்துள்ளது.

இந்தப் பணம் கூட்டுப் படைகளுக்குச் செலுத்துவதற்காகவும், "பயங்கரவாத" தடுப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவும், விமான சேவைகளுக்கு உதவுவதற்காகவும் பயன்படுத்தப்படவுள்ளது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையும் இந்த நகலை அங்கீகரிக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது. "பயங்கரவாத" தாக்குதல்களுக்கு எதிராக உள்ளூர் பாதுகாப்பை மேம்படுத்த மேலும் பலகோடி டொலர்கள் வழங்க வேண்டுமென ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

இதனை குடியரசுக் கட்சியில் உள்ளவர்களும் ஆதரித்தமையினால், செனட் சபையில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியுள்ளது.

இதேவேளை, ஈராக்கிய சனாதிபதி சதாம் ஹுசைன் தனது சிரேஷ்ட அமைச்சர்களுடன் மந்திராலோசனையில் ஈடுபட்டிருந்ததை ஈராக்கின் செய்மதி தொலைக்காட்சி நேற்று முன்தினம் ஒலிபரப்பியுள்ளது.

ஈராக்கிய துணைச்சனாதிபதி, பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்கள் ஆகியோரை இக்கூட்டத்தில் காணக்கூடியதாக உள்ளது. இக்கூட்டம் எப்பொழுது நடைபெற்றது எனக்கூறவில்லை. இருப்பினும் ஈராக்கின் யுத்தம் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

# "பொடோ" சட்டத்திற்கு எதிரான வழக்கு விசாரணைகள் ஆரம்பம்

"பொடோ" சட்டத்திற்கு எதிரான வழக்குகளின் விசாரணை நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றக் குழுவின் முன் பொடோ சட்டத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. இவ்விசாரணையின் போது மக்கள் சமூக உரிமைகள் அமைப்பின் சார்பாக வாதாடியே வழக்கறிஞர் ராஜின் சச்சார் பொடோ சட்டத்திற்கு எதிராகக் கடுமையான வாதங்களை முன் வைத்துள்ளார். பொடோ போன்ற ஒரு சட்டம் இல்லாத நிலையிலும் 1995 தொடக்கம் 2002ஆம் ஆண்டுகளுக்கு இடையே குற்றச் செயல்கள் குறைந்துள்ளதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ் வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை தொடரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




(01) நாம் ஒரு அடி எடுத்து வைக்க உடலெங்கும் எத்தனை தசைகள் பணிபுரிய வேண்டும்.
☐ 54 வகைத் தசைகள்

(02) உலகில் எந்த மரத்திற்கு மிக நீண்ட வேர்கள் உண்டு?
☐ தென் ஆபிரிக்காவிலுள்ள அத்திமரம் (Fig tree) 133m-400m- அடி.

(03) உலகில் பெரிய நூதனசாலை எது?
☐ பிஸ்தோனி.

04) மிகவும் அழகான பறவை எது?
☐ ஆண்மயில்

(05) நியூயோர்க்கிலிருந்து பாரிஸுக்கு தனியாக விமானத்தில் முதன் முதல் பறந்து சென்றவன் யார்?
☐. கார்லஸ் லிண்ட்பர்க்

(07 "றடொல்ப்" எனும் மானின் மூக்கின் நிறம் என்ன?
☐ சிவப்பு

(08) அறிவியல் துறைக்கு வழங்கப்படும் விருது எது?
☐.ஊல்.்.ப்

(09) உலகில் மிக உயரமான இடத்திலுள்ள தலைநகர் எது?
☐ அந்தீஸ் மலையில் பொலீவியா என்ற நாட்டின் தலைநகரம் லாபாஸில் உள்ளது. உயரம் 6459M

(10) சீனப்பெருஞ்சுவரின் நீளம் என்ன?
☐1684 மைல்

(11) முதலாவது உலகக்கிண்ண கிரிக்கெட் எங்கே எப்போது நடைபெற்றது?
☐ 1975 இல் மேற்கிந்தியத் தீவு

(12) தமிழ் இலக்கியத்தில் "முற்றும்" என்ற சொல்லை முதலில் அறிமுகப்படுத்தியவர் யார்?
☐ ,இளங்கோவடிகள்

(13) மேற்கு ஆசியா என்ற பதத்தினை உருவாக்கியவர் யார்?
☐ ஜவகர்லால் நேரு

(14) சிறிலங்காவின் தேசிய கீதத்தினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
☐ சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா

(15) எக்ஸ்-ரே கதிர்களைக் கண்டுபிடித்தவர் யார்?
☐ கோன்ராட் நாணம் ஜென்ட்

(16) கணித சூத்திரங்களால் கண்டுபிடிக்கப்பட்ட கிரகம் எது?
☐ நெப்டியூன்

(17) இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானியர் குண்டு வீசித் தாக்கிய பிரசித்திபெற்ற துறைமுகம் எது?
☐. பேர்ள்

(18) பூமியின் மத்திய கோட்டினூடாகச் செல்லும் விட்டம் எவ்வளவு?
☐ 7927 மைல்கள்

(19) உலகில் குப்பைகளை அதிகம் கொட்டும் நாடு எது?
☐ அமெரிக்கா

(20) பூச்சியினத்தில் தரையில் அதி வேகத்துடன் ஓடும் பூச்சி எது?
☐ கரப்பான் பூச்சி. மணிக்கு 5KM

(21) செயற்கைக் கண்களை அதிகம் தயாரிக்கும் நாடு எது?
☐ ரஷ்யா


(22) நமது கை பட்டதும் உருகக் கூடிய ஒரே ஒரு உலோகம் எது?
☐ காரியம்

(23) உலக வங்கியின் கணக்கு எந்தத் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றது?
☐ செப்டெம்பர் 01 ஆம் திகதி

(24) பறவைகளில் காகத்தின் சராசரி ஆயுட்காலம் எவ்வளவு?
☐ 100 வருடங்கள்.

# இதயம் நின்றுவிட்டாலும் மூளையை இறவாது பாதுகாக்க.....

இதய நோய் காரணமாக இதயம் நின்றவுடன் புதிய வைத்திய உபகரணங்கள் மூலம் இதயத்தை மீண்டும் செயற்பட வைக்க முடியும். இருந்தும் இது மிகவிரைவில் காலம்கடத்தாமல் செய்யவேண்டிய ஒன்றாகும். அவ்வாறு அல்லாத பட்சத்தில் மூளைக்கு வழங்கப்படும் ஒட்சிசன்,குளுக்கோஸ் என்பவற்றை பெற்றுக்கொடுக்க முடியாத நிலை . இரத்தத்திற்கு உண்டாகும்.



இவ்வாறு மூளைக்கு குளுக்கோஸ் கிடைக்காதுவிட்டால் மூளை இறந்துவிடும்.

இதனால் அதிகமான ஆராய்ச்சியாளர்கள் இதய நோய்களின் போது மூளையைப் பாதுகாக்கக் கூடிய முறை பற்றிக் கண்டறிய முற்பட்டனர்.

அமெரிக்க இதய நோய் நிபுணர் பீடர் சாபர் 50 வருடங்கள் வரை மேற்கொண்ட ஆராய்வுகளின் பலனாக இதய நோய்களின் போது மூளையைப் பாதுகாத்துக்கொள்ளும் முறையின் முடிவை அண்மித்துள்ளார்.

70 வயதுடைய சாபர் "அவசர இருதயநோயின் போது இதயம் செயலிழந்து ஐந்து நிமிடத்தினுள் மூளை இறந்துவிடும். ஆனாலும் செயலிழந்த இதயத்தை 20 நிமிடங்களின் பின்பு மீண்டும் செயற்பட வைக்க முடியும்" என்று கூறியுள்ளார்.

சாபரின் ஆராய்ச்சிகளின்படி மூளையின் சைலங்களுக்கு ஒட்சிசன்கிடைப்பது நின்ற பின்பு 10 செக்கன்வரை சைலங்கள் சேமித்து வைத்துள்ள ஒட்சிசனைப் பயன்படுத்தும். அப்போது நோயாளி நினைவற்ற நிலையில் காணப்படுவார்.

ஐந்து நிமிடங்களின் பின்பு சைலங்களிடம் உள்ள ஒட்சிசன் முடிவடையும் போது சைலங்கள் அதன்பின்பு தம்முள்ளேயே நச்சுத்தன்மையை உருவாக்கிக் கொள்ளும் எனக் கூறப்படுகின்றது.

1980 ஆம் ஆண்டளவில் சாபர் செய்த ஆராய்ச்சிகளின்படி உடலின் வெப்பநிலையை 7.2°F வரைகுறைப்பதன் மூலம் சைலங்களின் நச்சுத்தன்மை உண்டாவதைக் குறைக்க முடியும் எனத் தெரிய வந்துள்ளது.

நாய்களைக்கொண்டு செய்யப்பட்ட ஆய்வுகளின்படி உடலின் வெப்பநிலையைக் குறைப்பதன் மூலம் இரத்த நாளங்களினால் செல்லும் இரத்தத்தின் அமுக்கத்தைக்குறைக்க முடியும் எனத் தெரியவந்துள்ளது.

இதன் மூலம் 5 செக்கன்களில் நச்சுத்தன்மை உருவாக்கப்படுவதை 10செக்கன்கள் வரை கூட்டமுடியும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இருந்தும் சாபரின் ஆராய்ச்சிகள் பூரண வெற்றி அளிக்காமைக்கு காரணமும் இருந்தது.

மிருகங்களின் இரத்தத்தைக் குளிரவைக்கப் பயன்படுத்திய முறையால் மனித இரத்தத்தைக் குளிரவைக்க முடியாமல் போனமையே இதற்குக் காரணமாயிற்று.

1997 ஆம் ஆண்டு கலிபோர்னிய ஆராய்ச்சியாளரான மைக்கல் டாவின்(Michale Davin) புதிய ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்தி " பிறின்லோறோ காபன்" மூலம் புதிய முறையைக் கண்டுபிடித்துள்ளார்.

பிறின்லோறோகாபன் மூலம் புளோறின், காபன் என்பவற்றை பிரித்தெடுக்க முடிவதோடு அவை நுரையீரலின் மெல்லிய உறுப்புகளுக்கு சேதத்தை ஏற்படுத்தாது என்வும், பிறின் லோறோ காபனுக்கு ஒட்சிசன், காபனீரொட்சைட் என்பவற்றைச் சேமித்து வைக்க முடியும் எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதய நோயாளி ஒருவரின் இதயத்தை உரிய இயந்திரத்தின் உதவியுடன் செயற்பட வைத்துவிட்டு பின் நோயாளியின் நுரையீரலினுள்ளே பிறின் லோறோ காபன் செலுத்தப்படும்.

அவ்வேளை, பிறின்லோறோ காபன் இரு முறைகளில் செயற்படும். அவை தேவையான ஒட்சிசனைக் கொண்டு செல்வதோடு, தேவையான குளிரான இரத்தத்தையும் நுரையீரலுக்குப் பெற்றுத்தரும். அப்போது இரத்தம் மூளைக்குச் செல்லும். அதன் மூலம் மூளையின் சைலங்கள் குளிராகும்.

மைக்கல் டாவின், ஸ்டிவன் ஹரிஸ் ஆகிய வைத்தியர்கள் இருவரும் சேர்ந்து மேற்கொண்ட ஆய்வுகளின் போது ஒட்சிசன், பிறின்லோறோ காபன் என்பவற்றை வேறு வேறாக உடலினுள் செலுத்தக்கூடிய முறையைக் கண்டு பிடித்தனர்.

இதன்மூலம் கூடியளவு ஒட்சிசன் உட்செலுத்தக் கூடியதாகவும் இதன் மூலம் குளிராக்கலை வேகமாகச் செய்யமுடியும் எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், இவர்களால் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு 05 உபகரணங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அதன் மூலம், நாய்களில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் சிறந்த முடிவுகளைப் பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, இதில் ஒரு உபகரணத்தை அமெரிக்க இதய நோய் நிபுணர், பீடர் சாபருக்கு அனுப்பவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. சாபர் தனக்குத் தேவையான உபகரணம் கிடைத்த பின்பு இதய நோயால் மரண வாயிலுக்குச் செல்லும் நோயாளிகளின் இதயத்தை செயற்படவைக்க முயற்சி செய்வதோடு அதன் இடையில் மூளை இறக்காமல் பாதுகாக்கக் கூடிய முயற்சியையும் தொடங்கவுள்ளார்.

# தென்னம் பாளையிலிருந்து.... தென்னங்கன்று

தென்னையிலிருந்து தென்னம் பாளை உருவாகி காய் உருவாகி முற்றிப் பழுத்து விழுந்த காய்களை நாற்றுப் போட்டே தென்னங்கன்றுகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் பல்லவராயன்கட்டில் தென்னம் பாளையிலிருந்து நேரடியாகவே தென்னங்கன்றுகள் உருவாகி வருகின்றன. ஒவ்வொரு பாளையிலிருந்தும் தென்னங்கன்றுகள் உருவாகி வருகின்றமை ஓர் அதிசயமாகவே உள்ளது.



பல்லவராயன் கட்டு - மாதிரிக்கிராமத்தைச் சேர்ந்த பொ. இராசலிங்கம் என்பவரது காணியிலேயே இந்த அதிசயத் தென்னைமரம் காணப்படுகிறது. இதிலிருந்து பாளையுடன் கூடிய இரு தென்னங்கன்றுகளையும் எடுத்துவந்த தென்னை அபிவிருத்தி அலுவலர் க. தனிநாயகம் கிளிநொச்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் காட்சிக்கு வைத்துள்ளார். இப்பாளைகளிலிருந்து பூந்து ணர்கள் தனித்தனியாக வந்திருப்பதை சுட்டிக்காட்டிய அவர் குரோம சோம்ஸ்ஸில் உள்ள அடுக்கில் ஏற்பட்ட மாற்றமே இதற்குக் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவித்தார். அத்துடன் இவற்றைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிக்கு அனுப்பவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஒரு நூற்றாண்டு முயற்சியில் உருவான உலங்கு வானூர்தி

உலங்கு வானூர்திகள், விமானங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை நீக்கும் முகமாக உருவானவை ஆகும். அதாவது விமானங்கள் மேலெழுவதற்கு நீண்ட ஓடுபாதை தேவையாக இருந்தது. அதனால் யுத்தப் பிரதேசங்களில் பெரிய விமானத் தளங்களை அமைப்பதும் அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்குவதும் சிரமமானதாக இருந்தது. அத்துடன் விமானங்கள் பறத்தலின் போது ஒரே இடத்தில் நிலையாக நிற்பது சாத்தியமற்றதாக இருந்தது. இதனால் துருப்புகளை இவற்றின் மூலம் ஒரேயிடத்தில் தரையிறக்குவது சாத்தியமற்றதாக இருந்தது. இவற்றை உலங்கு வானூர்திகள் நிவர்த்தி செய்தன.

கி.மு. 1483இல் பிரபல ஓவியர் லியானாடோ டாவின்ஸி என்ற ஓவியர் முதன் முதலாக மிகப் பெரிய உலங்கு வானூர்தியின் படத்தை வரைந்தார்.

அதேபோல் 1783 இல் "சைனீஸ் ரொப்" என்ற பெயரில் உலங்கு வானூர்தி பொம்மை ஒன்று உருவாக்கப்பட்டது.

இதனையடுத்து 1796இல் சேர் ஜோர்ஜ் கேலே என்பவர் பொம்மையிலான விதவிதமான உலங்கு வானூர்திகளை உருவாக்கி சாதனை படைத்தார்.


உலங்கு வானூர்திகளின் பறத்தலுக்கான தத்துவம் மிக எளிமையானதாக இருந்த போதும், அதனை செயற்படுத்துவது இலகுவானதாக இருக்கவில்லை.

இவற்றின் செயற்பாடு கொள்கையளவில் சாத்தியமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாயினும் பலரது சந்தேகத்திற்குரியதாகவும், முரண்பாடுகளைக் கொண்டதாகவும் இருந்தது. ஆனபோதும் இவ்வாறான தன்மைதான் இவற்றைக் கண்டுபிடிப்பதற்கு தூண்டுகோலாகவும் இருந்தது எனலாம்.

உலங்கு வானூர்தியின் அடிப்படை சிறுவர்களின் ஒரு விளையாட்டுக் காற்றாடியைப் போன்றதாகும். இவ் உபகரணத்தில் பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்ட வட்ட வடிவிலான மூன்று சிறகுகள் கொண்ட காற்றாடியானது வேகமாகச் சுழற்றி விடப் படுகிறது. அப்போது காற்றாடியானது காற்றில் பல அடிகள் உயரத்திற்கு மேலெழுந்து பறக்கிறது. இவ்வாறான செயற்பாட்டிலேயே உலங்கு வானூர்திகளும் இயங்குகின்றன.

உலங்கு வானூர்திகளிலுள்ள காற்றாடியின் சுழற்சி வேகமானது படிப்படியாக அதிகரிக்கும் போது காற்றமுத்த வேறுபாடு காரணமாக வானூர்தி மேலெழத் தொடங்கும். காற்றாடிகள் சிறிதளவு வளைக்கப்பட்ட இறகுகளைக் கொண்டமைந்ததனால் இவை வேகமாகக் காற்றினை வெட்டும்போது காற்றுப்படிகள் (Wind Staircase) உருவாகின்றன.

இதனால் வானூர்தியானது வழமையான விமானங்கள் போலல்லாது படிப்படியாக



மேலெழவோ, கீழிறங்கவோ முடியும்.

நிலையான சிறகுகளையுடைய விமானங்கள் அவற்றின் காற்றமுத்தம் காரணமாக மேலெழுகின்றன. இவ்வாறான பறத்தலுக்கு பெருமளவு சக்தி தேவைப்படுகின்றது.

அதேபோல் உலங்கு வானூர்திகளின் இயக்கத்தில் பல சிக்கலான தன்மைகள் இருந்தன. இவற்றைத் தீர்ப்பதில் பொறியியல் ரீதியில் பல சிரமங்கள் அப்போது ஏற்பட்டன.

1842இல் ஆங்கில ஆராய்ச்சியாளர் ஜோர்ஜ் காய்லி என்பவரின், 04 காற்றாடிகளைக் கொண்ட நீராவி இயந்திர வானூர்தி மிகக் குறைந்தளவு உயரத்திற்கே மேலெழுந்தது.

அதேபோல், 1878 இல் இத்தாலிய விஞ்ஞானி என்றிக்கோ போர்லானி என்பவரின் சிறிய நீராவி வானூர்தியும் மிகக் குறைந்த நேரத்தில் மிகக் குறைவான உயரத்திற்கே மேலெழுந்தது.

இவை மிகக் குறைவாக மேலெழக் காரணம், வானூர்திகளின் கனம் இயக்கத்திற்குத் தடையாக இருந்தமையாகும்.

எனினும், மண்ணெண்ணெய் இயந்திரங்கள் பாவனைக்குட்படுத்தப் படத் தொடங்கியவுடன், பல சக்கரங்களின் உதவியுடன் வேகமாகச் சுழலக் கூடிய காற்றாடி கொண்டு உலங்கு வானூர்தி அமைக்கப்பட்டது.

இவ்வாறு நூறு வருடங்களின் பின்பு, உலகப் போர் நடந்த காலங்களில் இயந்திரத்துடன் மனிதன் இருக்கக் கூடிய உலங்குவானூர்தியை (1904 இல்) பிரெஞ்சு விமானத் தயாரிப்பாளர் லூயிஸ் என்பவர் தயாரித்தார்.

இவ் உலங்கு வானூர்தி மனிதனுடன் ஐந்தடி உயரத்தில் 02 நிமிடங்கள் பறந்தது.

இதுவே, தொழில்நுட்ப ரீதியில் முதலாவது வெற்றிப் பறப்பாகும்.

எனினும், இது சக்திகுறைந்ததும் நடைமுறையில் இயக்கச் சாத்தியம் அற்றதுமாகக் காணப்பட்டது.

இகோர் சிகோர் ஸ்கை என்பவர் 1909, 1910 ஆகிய இரு ஆண்டுகளிலும் இரண்டு வானூர்திகளை அமைத்துக் காட்டினார்.

எனினும் 1923இல் ஸ்பானிய பொறியியலாளரால் தயாரிக்கப்பட்ட உலங்கு வானூர்தியே நடை முறையில் முதலாவது உலங்கு வானூர்தியாகும்.



இது தொழில் நுட்ப ரீதியில் முன்னேற்றகரமான ஒன்றாகவும் காணப்பட்டது. எனினும ... தத ... து வ அடிப்படையில் மேல் நோக்கி எழ மட்டுமே உலங்கு வானூர்தி எனக் கொள்ளப்பட்டது.

ஏனெனில், முன்னோக்கிய இயக்கத்திற்கு வழமையான நிலையான சிறகுகளுடைய விமானங்களில் பாவிக்கப்படும் சாதனமே இங்கும் பயன்படுத்தப் பட்டமையே காரணமாகும்.

இதனையடுத்து 1936இல் ஜேர்மனியின் ஃபோக் வுல்ஃப் எனும் நிறுவனம் முதன் முதலாக வெற்றிகரமான உலங்கு வானூர்தியை உருவாக்கிக் காட்டியது.

அதே போல் 1937இல் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி ஹென்றி போர்க்கினால் தயாரிக்கப்பட்ட உலங்கு வானூர்தி இரண்டு காற்றாடிகளை கொண்டதுடன் எவ் டபிள்யு - 61 எனும் பெயருடன் நடைமுறையில் தத்துவ ரீதியாகவும் சிறந்த முறையில் இயங்கியது.

அத்துடன் இவ் உலங்கு வானூர்தி தனது முதலாவது பறப்பை ஜேர்மன் நாட்டைக் கடந்து பிறீமனிலிருந்து பேர்லின் வரை ஒரு மணி நேரத்திற்கு 70 மைல் வேகத்தில் பறந்தது. பறந்த மொத்த நேரம் 1 மணித்தியாலம் 20 நிமிடமாகும்.

இரட்டைக் காற்றாடிகளைக் கொண்ட இவ்வானூர்தியின் இயக்கம் மிகவும் சிக்கலானதாக இருந்தது மட்டுமன்றி, வானூர்திகளின் வடிவம், இறக்கைகளின் வடிவம் முன்னோக்கிய இயக்கத்தைக் கட்டுப்படுத்தல் என்பன இவற்றின் வளர்ச்சியில் தடைகளாக இருந்தன.

அத்துடன் முன்னோக்கிய இயக்கத்தின்போது இரு காற்றாடிகளும் வெவ்வேறு காற்றமுத்தங்களைக் கொடுத்ததால் இயக்கத்தில் தளம்பல்கள் ஏற்பட்டன.

இதனால் வானூர்தியில் திருப்பமும் ஏற்பட்டது. இதற்கு போர்க் இருமாறுபட்ட திசைகளில் இவ்விரு காற்றாடிகளையும் சுழலச் செய்வதன் மூலம் தீர்வு கண்டார்.

டச்சு விஞ்ஞானியான கிக்கோர்சி என்பவர் பெரிய ஒரு காற்றாடியையும், மற்றுமொரு சிறிய காற்றாடியையும் உபயோகித்து இப்பிரச்சினைக்கு சுலபமான தீர்வு கண்டார்.

இந்த வகையில் 1940இல் இகோர் சிகோர் ஸ்கை இவ்வாறான இன்னொரு உலங்கு வானூர்தியை உருவாக்கி, பின்னர் 1942இல் அமெரிக்கப் போர்ப் படைக்கு வழங்கினார்.

இவ்வாறான உலங்கு வானூர்தியே தற்பொழுது பாவனையில் உள்ளது. இச் சிறிய காற்றாடி உலங்கு வானூர்தி செல்லும் திசையையும் நிர்ணயிப்பதாக உள்ளது.

இன்று உலங்கு வானூர்திகள் பல்வேறு தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றன.

இராணுவத் தேவைகளுக்கு மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதுடன் மக்களின் குறுகிய தூரப் பயணங்களில் குறிப்பிடத்தக்களவு பங்கையும் வகிக்கின்றன.

## இளஞ்சிங்கங்களே மனித வேட்டையில் இறங்குகின்றன


மனிதர்களை அடித்துத்தின்பதில் சிங்கங்களுக்கு அலாதி விருப்பம் உண்டாம். மேலும் மனித மாமிசத்தை, விரும்பி உண்ணும் சிங்கங்கள் இளமையாகவும், புஷ்டியாகவும் உள்ளன என்றும், இளஞ் சிங்கங்களே மனித வேட்டையில் ஆர்வமாக இறங்குகின்றன என்றும் விலங்கியல் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

வயது முதிர்ந்த சிங்கங்களே வேகமாக ஓடும் மிருகங்களைத் துரத்திச் சென்று வேட்டையாட முடியாமல், சுலபமாகப் பசிதீர்த்துக் கொள்வதற்காக மனித வேட்டையில் இறங்குகின்றன என்பதே இவ்வளவு காலமாக ஆட்கொல்லி சிங்கங்களைப் பற்றிய நம்பிக்கையாக இருந்தது. பெரும்பாலும் பல் விழுந்த சிங்கங்களே ஆட்கொல்லிகளாக மாறுகின்றன என்பது பொதுவான கருத்து. ஆனால், பின்னர் நிகழ்த்தப் பட்ட ஆய்வுகளில் டஸாவோ தேசிய பூங்காவைச் சேர்ந்த மனித கொல்லிகளான 23 சிங்கங்கள் உள்ளடக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட போது, கால் வாசிக்கும் குறைவான சிங்கங்களே பற்களில் பிரச்சினை கொண்டவையாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. ஏனையவை 05 வருடங்களுக்குக் கீழ்ப்பட்டவையாகவும், தேகாரோக்கியத்துடனும் காணப்பட்டன.

பொதுவாகவே மனித மாமிசம் புசித்த விலங்குகள் மனித வேட்டையில் ஈடுபடுவதையே விரும்புகின்றன.

விலங்குகளின் எண்ணிக்கையைவிட மனிதர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதும் மனிதனை சுலபமாக வேட்டையாடலாம் என்பதும் அவை மனிதனை வேட்டையாடக் காரணம் என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

## தீந்தைமிகு புதன் கிரகம்



சூரியனுக்கு மிக அருகிலுள்ள கிரகம் புதன். இதன் விட்டம் 4990 கி.மீ. சூரியனிடமிருந்து சராசரியாக 579 கோடி கி.மீ. தொலைவிலுள்ளது. சூரியனை 88 நாட்களில் சுற்றுகின்றது. அது தன்னைத் தானே சுற்றுவதற்கு 59 நாளாகின்றது.

புதன் பரப்பு சந்திரனைப் போலவே உள்ளது. அதில் மலைகளும், பள்ளங்களும், சமவெளிகளும் இருக்கின்றன.

இதன் மையப்பகுதி இரும்பும், நிக்கலும் கொண்டதாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.. புதனின் மேற்பரப்பில் சிலிக்கான் பாறைகள் உள்ளன. பகலில் வெப்பம் 400 டிகிரி சென்ரிகிரேட் வரை இருக்கும். ஆனால் இரவில் 127 சென்ரிகிரேட்டுக்குக் குறைந்துவிடும்.

இக்கிரகத்தில் பிராணவாயு இல்லாமையினாலும், அதிக வெப்பத்தினாலும் இங்கு உயிர் வாழ்வதற்கு சாதகமான சூழ்நிலை இல்லை.

புதன் கிரகம் சிறியதாக இருப்பதுடன், சூரியனுக்கு அண்மையில் இருப்பதாலும் (டெலஸ்கோப்) தொலைகாட்டி இல்லாமல் காணமுடியாது.

மரினா - 10 எனும் அமெரிக்க விண்கலம் புதன் கிரகத்தைப் படம்பிடித்து அனுப்பியது. அதில் காந்தப் புலன் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

# பயணியர் ஊர்திகள் புதிதாகக் கொள்வனவு செய்வோர் கவனத்திற்கு

மேற்படி ஊர்திகள் கொள்வனவு செய்வோர் பயணியர் போக்குவரவு ஊர்தி வழியனுமதிப் பணியகம்-புதுக்குடியிருப்புடன் தொடர்பு கொண்டு தாங்கள் விரும்பும் வழித்தடங்களை உறுதி செய்துபின் கொள்வனவு செய்வது அவருக்கு நன்மைதரும் என்பதையும், அல்லாமல் கொள்வனவு செய்யப்படும் ஊர்திகள் அவர் விரும்பும் வழித்தடங்களில் பணிக்கு அனுமதிக்க முடியாத சிக்கலைத் தோற்றுவிக்கக் கூடும் என்பதையும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:- வழியனுமதிப் பணியகத்துடன் தொடர்புகொண்டு உறுதி செய்பவர் வரிசை ஒழுங்கிலேயே ஒப்புதல் வழங்கப்படும்.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப்பணியகம்.

(சி-8054)

# நடத்துநர் பணி நேர்முகத் தேர்வு

தமிழீழப்
போக்குவரவுக்
கழகம்

தமிழீழப் போக்குவரவுக்கழக நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத் தேர்வு 09-04- 2003, 10-04-2003ஆம் நாள் சனி, ஞாயிறு காலை 10.00 மணி தொடக்கம் பகல் 03.00 மணிவரை தமிழீழப் போக்குவரவுக் கழகம்- பேருந்துப்பகுதி - புதுக்குடியிருப்பு பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் வகையில் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை ,
விசுவமடு.

(சி-8054)

# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையாளர்கள் சுயவிபரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகைதரவும்.

நேர்காணல் நடைபெறும் இடம் :- ஆயப்பகுதி – நடுவப்பணியகம், கிளிநொச்சி.
காலம் :- 12 – 04 – 2003, மு.ப. 10.00 மணி

**பணிநிலை :-**

| | | | |
|---|---|---|---|
| 01) ஆய அலுவலர் | (இருபாலாரும்) | 05) சமையலாளர் | (ஆண்கள்) |
| 02) ஆய உதவியாளர் | (ஆண்கள்) | 06) சமையல் உதவியாளர் | (ஆண்கள்) |
| 03) எழுதுநர் | (ஆண்கள்) | 07) பாதுகாப்புப் பணியாளர் | (ஆண்கள்) |
| 04) தட்டெழுத்தாளர் | (ஆண்கள்) | 08) மொழிபெயர்ப்பாளர் | (ஆண்கள்) |

**கல்வித் தகைமை :-**

| | | |
|---|---|---|
| பணிநிலை | 01,03 | இற்கு க.பொ.த.(உ/த) சித்தியடைந்திருத்தல். |
| பணிநிலை | 02 | இற்கு க.பொ.த. (சா/த) கற்றிருத்தல். |
| பணிநிலை | 04 | இற்கு க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருப்பதோடு, தட்டச்சுச் சான்றிதழும் பெற்றிருத்தல். |
| பணிநிலை | 05 | இற்கு உணவு வகைகளைத் தயாரிப்பதில் முன்னனுபவம் பெற்றிருத்தல். |
| பணிநிலை | 06 | இற்கு 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல். |
| பணிநிலை | 07 | இற்கு தேகாரோக்கியமும், நன்நடத்தையுமுடைய பணியில் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது. |
| பணிநிலை | 08 | இற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக உரையாடக்கூடியவர், எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும். |

**சிறப்புச்சலுகை :-** கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதி செய்து தரப்படும்.

ஆயம்,
நிதித்துறை,
தமிழீழம்.

(சி-8050)

# கிளி. மாவட்டத்தில் மாணவர் ஒருவருக்கு இருபது ரூபா பெறுமதியான சத்துணவு

## - கிளி. அரசாங்க அதிபர் தகவல்

**கிளி. மாவட்டத்தில் மாணவர் ஒருவருக்கு 20ரூபா பெறுமதியான சத்துணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கிளி. மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் தெரிவித்தார். கடந்த புதன்கிழமை பூநகரியில் நடைபெற்ற சத்துணவு தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.**

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான சத்துணவுத் திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கிளி. மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் கிளி. வலய கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், உதவிக் கல்விப் பணிப்பாளர், யூ.என். பிரதிநிதி ரவி, பூநகரிப் பிரதேச செயலர், வன்னி கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மாணவர்களின் போஷாக்கு சம்பந்தமாக ஆராயப்பட்டது. கடந்த காலங்களில் மாணவர்களுக்கான இலைக் கஞ்சித் திட்டத்தை செயற்படுத்துகையில் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்கள் பற்றியும் அவற்றை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

மாணவர்களுக்கான போஷாக்குத் திட்டத்திற்காக மாணவர் ஒருவருக்கு 20 ரூபா பெறுமதியான சத்துணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய திட்டத்தின் மூலம் ஏராளமான வறிய மாணவர்கள் பயன்பெறுவதுடன் கல்வி வளர்ச்சியும் அதிகரிக்கும் என அரச அதிபர் நம்பிக்கை தெரிவித்தார். (லோ)

# கிளி. மாவட்ட பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிக்கொட் திட்டத்தினூடாக கிளி. மாவட்ட பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் முதற்கட்டமாக மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தளபாடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மகாவித்தியாலயம், செ.திரேசா பெண்கள் கல்லூரி, பரந்தன் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஏனைய பாடசாலைகளுக்கு தளபாடங்கள் தொடர்ந்து வழங்கப்படும் எனவும் தளபாடம் கொள்வனவு செய்வதற்கு நெதர்லாந்து அரசும் முன்வந்துள்ளது எனவும் 'நிக்கொட்'திட்ட நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (அ)

## பயிற்சி நிறைவும் கண்காட்சியும்

பெண்கள் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி நிறைவு விழாவும் கண்காட்சியும், கிளி. சமுதாய முன்னேற்ற நிலைய தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் எதிர்வரும் 7ம் திகதி பி.ப.2.00 மணிக்கு மேற்படி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,லோ)

## —ஜேர்மன் அமைப்புக்களால்—

# மின்வழங்கும் சாதனங்கள் மாதிரிப் பண்ணைக்கு அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஜேர்மன் நாட்டில் வதியும் தமிழீழ மக்களும், ஜேர்மன் தமிழர் ஒருங்கமைப்புக் குழுவும், பொருண்மிய மதியுரையக ஜேர்மன்நாட்டுக் கிளையும் இணைந்து கிளிநொச்சி வட்டக்கச்சியில் இயங்கிவரும் மாதிரிப் பண்ணைக்கு மின்சாரவசதி வழங்கும் சாதனங்களை அன்பளிப்புச் செய்துள்ளன.

பத்து சி.வாற் மின்சாரம் வழங்கக்கூடிய காற்றலை ஒன்றினையும் சூரிய சக்தியில் இயங்கும் 24 மின்கலங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளன.

இம்மின்கலங்களை மக்கள் மாதிரிப்பண்ணையில் சென்று பார்வையிடலாம் என றெக்நிறுவனப் பொறுப்பாளர் தாஸ் தெரிவித்துள்ளார். (சோ)

## பயிர்ச்செய்கை கூட்டம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு குளத்தின் கீழான சிறு போக பயிர்ச்செய்கையின் போது விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள், நீர் விநியோகத்தில் இடையூறுகளைத் தவிர்த்தல், இக்காலப்பகுதியில் செய்கை மேற்கொள்ள வேண்டிய நிலப்பரப்பு அளவு என்பன தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை உ.மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் முல்லைமாவட்ட பொருண்மிய இணைப்பாளர் ஆ.தர்மகுலசிங்கம், விசுவமடு பிரதேச இணைப்பாளர் சு.சிறிதர், நீர் விநியோகஸ்தர் சூசைமுத்து, இப்பகுதி விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்

# யாழ். நகர புனரமைப்பு குறித்து செயலகத்தில் விசேட மாநாடு!

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள யாழ். நகரை திட்டமிட்ட முறையில் எவ்விதம் புனரமைப்பு செய்து அபிவிருத்திக்கு இட்டுச் செல்லலாம் என்பது பற்றிய விடயங்களை ஆராயும் பொருட்டு நேற்று யாழ். அரச செயலகத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் விசேட மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப யாழ். நகரம் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது

## சேமிப்புக்கணக்கு ஆரம்பம்

எதிர்காலச் சந்ததியினரின் நலனை நோக்காகக் கொண்டு 'தளிர்' சேமிப்புக் கணக்கை அறிமுகப்படுத்தியுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சிக்கிளையில் கடந்த வியாழனன்று செல்வாநகர் அ.த.க பாடசாலையில் நடமாடும் சேவை மூலமாக சுமார் முப்பது சிறார்களுக்கு சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபரினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரினதும் ஏற்பாட்டின் மூலம் இது மேற்கொள்ளப்பட்டது என கிராமிய உற்பத்திக்குழு செயலாளர் தெரிவித்தார்.

# சிங். வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு விஜயம்

சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயக்குமார் நேற்று முன்தினம் கொழும்புக்கு வருகை தந்துள்ளார்.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவின் அழைப்பின் பேரில் இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு இவர் கொழும்புக்கு வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் சிறிலங்கா பிரதமர், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்த பேச்சு வார்த்தையின் போது இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்தும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

## - கிளி. மாவட்டத்தில் உள்ள -

# விலங்கறுமனைகளை மேம்படுத்தல் பற்றி ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட விலங்கறுமனை (இறைச்சிக்கடை) புலால் வாணிபங்களின் (மீன் விற்பனை நிலையங்கள்) சுகாதார நிலையை மேம்படுத்துதல் தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு. கிளிநொச்சி நிர்வாக சேவை மண்டபத்தில் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் அருண் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், வணிகர் ஒன்றியத் தலைவர், மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர், பிரதேச சபைகளின் செயலர்கள், விசேட ஆணையாளர்கள், பிரதேச செயலர்கள், மருதம் வாணிபப் பணிப்பாளர், பொறுப்பாளர்கள் தமிழீழ நிர்வாக சேவை கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர், பொது சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர். இதில் முக்கிய தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

கிளிநொச்சி நகர் விலங்கறுமனை (இறைச்சிக்கடைகள்) மற்றும் மீன் விற்பனைக் கழிவுகள் மூடிய கழிவுத் தொட்டிகளில் போடப்பட்டு குறிப்பிட்ட இடத்தில் இறுதி அகற்றல் செய்யப்பட வேண்டும்.

அத்துடன் எருமை மாடுகள், பசு மாடுகள் போன்றவற்றை இறைச்சிக்காக வெட்டுவது தொடர்பாகவும், வெட்டப்படும் விலங்குகளுக்கான உடற்பரிசோதனை, பிணப்பரிசோதனை, மேற்கொள்ளல் மற்றும் விலங்கறுமனைக்குத் தேவையான நீர்வசதி வழங்கல் விலங்கறுமனையின்றி வெட்டப்படும் இடங்களுக்கு விலங்கறுமனை அமைத்தல் பற்றியும் ஆராயப்பட்டன. (லோ)

## - நாச்சிக்குடாப் பகுதியில் -

# முஸ்லிம்களின் நன்மைகருதி நலன்புரி நிலையம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

நாச்சிக்குடாப் பகுதியில் முஸ்லிம் மக்களின் நன்மைகருதி நலன்புரிநிலையம் ஒன்று அமைக்கப்பட்டு கடந்த புதனன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை பூநகரிப்பிரதேச செயலர் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் மன்னார்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். நலன்புரிநிலையத்தை கிளி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நாடாவைவெட்டித் திறந்துவைத்தார்.

மேற்படி நலன்புரி நிலையம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் பூநகரி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் அமைக்கப்பட்டது. மேற்படி நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டதால் 25 ற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் நன்மை பெற்றுள்ளன. (லோ)



# திலீபன் மருத்துவமனையில் மாணவர்களுக்கு உடற்பரிசோதனை

ஆழியவளை,திலீபன் மருத்துவ சேவையினரால் மாமுனை அ.த.க பாடசாலையில் நேற்று முன்தினம் 10.30 மணியளவில் பாடசாலை மாணவர்களுக்கு மலேரியாத் தொற்று நோய் சம்பந்தமாகக் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

அத்துடன் உடற்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இரத்தச் சோகை, குடற்புழு தொற்றுக்களினை இனம்கண்டு அவற்றிற்கான மாத்திரைகளும் வழங்கப்பட்டன. (11)

# கிளியில் மீள் குடியமர்வு நிதி சிலபகுதிகளுக்கு வழங்கப்படும்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு - கிழக்கு அவசர புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மீள்குடியமர்வு நிதி கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

திருவையாறு கிராமத்தில் - 72 குடும்பங்களுக்கும் பெரிய பரந்தன் பகுதியில் - 127 குடும்பங்களுக்கும், உமையாள்புரம் கிராமத்தில் - 71 குடும்பங்களுக்கும், முரசு மோட்டை - 120 குடும்பங்களுக்கும் ஜீவனோபாய உதவிக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவே வழங்கு வதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இதற்கான நிதியினை இப்பகுதி மக்களால் பதிவு செய்யப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (லோ)

## சிரமதானம்

(உடையார்கட்டு)

தியாகி அன்னை பூபதி தினத்தை முன்னிட்டு உடையார் கட்டு தெற்கு பகுதியிலுள்ள குரவிலில் தேசிய எழுச்சிப் பேரவையின் ஒழுங்கு படுத் கடந்த திங்கட்கிழமை புதிய சிரம தானம் மூலம் அமைக்கப் பட்டது. நூற்றுக் கணக்கான மக்கள் இதில் பங்கேற்றனர். (19)

## - நாவற்காடு கிராமத்தில் - காணியற்ற 35 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன

முல்லை. மாவட்ட அரசியல் துறையினரும், ஊரக வளர்ச்சிப் பணியினரும் இணைந்து மேற் கொண்ட கடும் முயற்சியினால் முள்ளியவளை நாவற்காடு கிராமத்தில் காணி அற்றோருக்கு கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபரினால் காணி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்தில் உள்ள காணி அற்ற 35 குடும்பங்களுக்கு காணி வழங்கப்பட்டதையடுத்து மேற்படி காணி கூட்டு முயற்சியில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

இதேபோன்று முள்ளியவளை புதறிகுடா கிராமத்திலும் காணியற்ற 30 குடும்பங்களுக்கு காணி வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. (ஆ)

## மீள்குடியேற்றக் கொடுப்பனவு

கரைதுறைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட பல கிராமங்களுக்கு மீள்குடியேற்றக் கொடுப்பனவு வழங்கப்பட்டுவருகின்றது.

முல்லைத்தீவு நகர கிராம சேவையாளர் பிரிவுகளிற்கும் அளம்பில், செம்மலை பகுதிகளுக்கும் வழங்கப்பட்டதையடுத்து பல மாதங்களின் பின் கடந்தவாரம் குமாரபுரம் முறிப்பு கிராமங்களில் உள்ள மக்களுக்கான மீள்குடியேற்ற கொடுப்பனவு முதற்கட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவுகள் யாவும் கொடுப்பனவு பெறுவோரின் பெயர்களில் வங்கிக்கிளைகளில் கணக்கு இலக்கங்கள் மூலம் ஒதுக்கப்பட்டு மக்கள் அக்கொடுப்பனவுகளை வங்கிக் கிளைகளிலேயே பெற்றுவருகின்றனர். (ஆ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தின்
ஐந்தாவது துணைவேந்தராக பதவியேற்றுள்ள
**பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ்**

அவர்கள் பனை தென்னை வள அபிவிருத்திக்காக கடந்த பல ஆண்டுகளாக தன்னலமற்ற தமது மகத்தான சேவையினால் வள அபிவிருத்தியினைப் பல்கலைக்கழக கல்வி நிலைக்கு உயர்வடைய அயராது உழைத்து வரும் பெருந்தகையர். புதிய பதவியில் மேலும் சிறந்த சேவையினை வழங்கி பனை தென்னை வள அபிவிருத்தி உயர்வடையவும், அதை நம்பி வாழும் உழைக்கும் மக்களின் வாழ்வு மேன்மையுறவும் தொடர்ந்தும் தங்கள் சேவையை எமக்கு தொடரவும் இறைவனை வேண்டி தங்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சிறப்புக்களும் பெற்றுபல்லாண்டு வாழ வேண்டுமென சங்கங்கள், மாவட்ட இணையங்கள் சார்பில் மனமார வாழ்த்துகின்றோம்.

கண்டி வீதி,
கிளிநொச்சி.

**வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்.** (சி-8052)



## நேர்முகத்தேர்வு

### பணிநிலை வேண்டுகை விளம்பர இல -45

மேற்படி விளம்பரத்திற்கமைய விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை 06.04.2003 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி டிப்போச்சந்திக்கு அருகாமையிலுள்ள தமிழீழ போக்குவரத்துக்கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்குரிய சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்கும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-8049) **-நிர்வாகம்.**


## பரீட்சை

யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டமனாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தரம் 12 மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் கடந்த செவ்வாய் தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

மேற்படி பரீட்சையானது உயிரியல் இணைந்த கணிதம், தமிழ்,பொருளியல்,பௌதிகவியல், இரசாயனவியல், வணிகக் கல்வி, பொது ஆங்கிலம், சித்திரம், புவியியல் ஆகிய பாடங்களுக்கு நடைபெற்றுவருகிறது.

இப்பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதியுடன் முடிவடையும். (ஆ)

## கிணறுகள்-புனரமைப்பு

(ஒட்டுசுட்டான்)

பொருண்மிய மதியுரையகத்தின் ஆதரவுடன் எக்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் தண்டுவான், பழம்பாசி ஆகிய கிராமங்களில் கிணறுகள் அண்மையில் புனரமைக்கப்பட்டன.

இதேவேளை ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள 9 முன் பள்ளிகளுக்கு யுனிசெவ். நிறுவனத்தின், நிதியுதவியுடன் பாய் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. (05)


## மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவில்...

தாய் மண்ணில் முத்தாக

13 □ 04 □ 1977



தாயக மண்ணில் வித்தாக

05 □ 04 □ 2000

### மேஜர் தீர்மலை
**(செல்வரத்தினம் விஜயலட்சுமி)**
(தம்பிராய், பூநகரி)
[கேணல் கிட்டு பீரங்கிப் படையணி]

*விடுதலைக் கனவை நெஞ்சினில் சுமந்து*
*வீரத்தலைவன் அணி புகுந்த – கண்மணியே*
*வடுச்சுமந்த வாழ்வை மாற்ற வரிப்புலியாகி*
*கனரகம் கரம் கொண்டு களம் மீட்டாய் – நிர்மியே*
*உன் விழி சென்ற இடமெல்லாம் பகைவன் விதி மாறியது*
*வீரத்தோடு சமராடி சுவர்க்கம் நீ கண்டாய் – நாம்*
*விழி சொரிய மலர்தூவி நெஞ்சில் உன் நினைவை*
*சுமக்கின்றோம்.*

தம்பிராய், பூநகரி. (3063) **- குடும்பத்தினர்.**



## அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**கிளைக்குழுத் தெரிவு: 13-04-2003 ஞாயிற்றுக்கிழமை**

22,23-03-2003 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவிருந்த, கீழ்க் குறிப்பிடப்பட்ட கிளைக் குழுக்களுக்கான தெரிவுகள் நிறைவெண் போதியதாக இல்லாத காரணத்தினால் நடைபெறவில்லை. மீளவும் இக்கிளைகளுக்கான பொதுச்சபைக் கூட்டங்கள் 13-04-2003 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. 07 | முகமாலை | திரு.தி.வித்தககலாநிதி | தலைமைக் காரியாலயம், பளை |
| 02. 09 | கிளாலி | திரு.க.சின்னராசா | தலைமைக் காரியாலயம், பளை |
| 03. 11 | அல்லிப்பளை | திரு.ந.நவநீதன் | தலைமைக் காரியாலயம், பளை |
| 04. 13 | தம்பகாமம் | திரு.த.பத்மானந்தன் | தலைமைக் காரியாலயம், பளை |
| 05. 14 | சங்கத்தார் வயல் | திரு.இ.ஜெகதீபன் | தலைமைக் காரியாலயம், பளை |

முக்கிய குறிப்பு: இக்கூட்டத்தில் கிளைக்குழுத் தெரிவும், தலைவர், உபதலைவர், செயலாளர் தெரிவும், பொதுச்சபை பிரதிநிதிகள் தெரிவும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

ஒப்பம்: **த. கந்தசாமி,**
(சி-8053) **கூ.அ.உ..ஆணையாளர், கிளிநொச்சி.**



## செந்தமிழன் 5ஆம் ஆண்டு நினைவுகள்

வீட்டிற்கு வரமாய்

14 □ 09 □ 1972



நாட்டிற்கு உரமாய்

05 □ 04 □ 1998

### 2ஆம் லெப்டினன்ட் செந்தமிழன்
[திருச்செல்வராசா பிரபாகரன்]

உனது நினைவுகளுடன்
7ஆம் வட்டாரம், **அம்மா, அப்பா, சகோதரர்கள்,**
புதுக்குடியிருப்பு. (2825) **மைத்துனர், மருமக்கள்.**



## 29ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
09 □ 11 □ 1938



மறைவு
08 □ 03 □ 2003

**05-04-2003**

அன்பின் திருவுருவே, பாசத்தின் உறைவிடமே, எங்கள் இயலாமைக்காலத்தில்
உன் துணையை நம்பியல்லவோ இறுமாந்திருந்து விட்டோம்.
படுமரமாய் நாமிருக்க பசுந்தளிராய் இருந்த நீ
எம்மை விட்டு முந்திச் சென்றதேனோ?
இப்பிறப்பில் எங்கள் எல்லோரிலும் இளையோனாய்ப் பிறந்தும்
மூத்தோனாய் எங்களை வழி நடத்தி நல்வாழ்வு காட்டியது போதாதென்று மறுபிறப்பில் எங்கள்
அண்ணனாகவே பிறந்து இன்னும் கூடுதலான உதவிகள் செய்யலாமென்றெண்ணி
முந்திச் சென்றனையோ,
உன்றன் அந்தராத்மா என்றென்றும் எம்மை வழி நடத்துவதாக.

### வேலுப்பிள்ளை சின்னத்துரை
**(முன்னாள் கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர்,**
**சமாதான நீதிபதி,**
**சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளர்)**

**இ. தெய்வேந்திரம்,**
*வீதி அபிவிருத்தித் திணைக்களம்,*
*முல்லைத்தீவு.*

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,
**வே. தம்பையா** (அண்ணா),
**இ. பொன்னம்மா** (அக்கா),
**க. பாக்கியம்** (அக்கா)
**மனோன்மணி மகாலிங்கம்,**
*வாதரவத்தை, புத்தூர்.* (3059)

## சிந்தனைக்கு

நாம் துணிந்து போராடுவோம். சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கின்றது. வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 05-04-2003

## நீடித்த அமைதிக்கு.....!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்தவும் காரணமாக இருந்த காரணிகளில் அது சந்தித்த பெரும் பொருளாதார நெருக்கடியும் காரணமென்பது வெளிப்படையானதொன்று. அதாவது, நாட்டை நிர்வகிக்க முடியாதளவிற்குப் பொருளாதார நிலை / நெருக்கடி இருந்ததன் காரணமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுக்களில் தீவிர முனைப்புக்காட்டினார்.

ஆனால், கடந்த ஒரு வருடகால அமைதியான சூழ்நிலையும்–சமாதானப் பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட முன்னேற்றங்களும் சிறிலங்காவின் பொருளாதாரத்தை இயங்கச் செய்துள்ளன. தற்போதைய ஈராக்கிய யுத்தம் பொருளாதாரத்தைச் சிறிதளவு பாதிக்கத் தொடங்கியிருப்பினும், பொருளாதாரரீதியில் கடந்த ஆண்டுகளை விட சிறிலங்காவின் நிலை மேம்பட்டுள்ளதாகவே கூறமுடியும்.

அதிலும் குறிப்பாக சர்வதேச நாடுகளிடம் இருந்தும், சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் சிறிலங்கா அரசு எதிர்பார்க்கும் நிதி உதவிகள் கிடைக்கத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே சில நாடுகள் சிறிலங்காவிற்கான நிதியுதவிகளை அறிவித்துள்ள அதேவேளை, உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவைகளும் உதவித்திட்டங்களை அறிவிப்புச் செய்துள்ளன.

இந்தவகையில், உலகவங்கி சிறிலங்காவிற்கான நிதியுதவியாக 800 மில். அமெரிக்க டொலர்களை (சுமார் 8000 கோடி ரூபா) சிறிலங்காவிற்கு வழங்க முன்வந்துள்ளது. இந் நிதியுதவியானது சிறிலங்காவின் எதிர்பார்ப்புக்களை பெருமளவில் திருப்திப்படுத்தும் அளவிலானதெனில் மிகையாகாது. அத்தோடு, ஏனைய நிதி நிறுவனங்கள், நாடுகள் என்பவற்றில் இருந்து கிடைக்கப் பெறும் உதவிகள் ரணில் அரசாங்கத்தினை பொருளாதார நெருக்கடியில் இருந்து காப்பாற்றுவதற்குப் போதுமானவை என்றே கொள்ளலாம்.

இதேவேளை, யூன் மாதத்தில் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளுக்கான கூட்டம் யப்பானில் நடைபெறும்போது மேலும் குறிப்பிடத்தக்களவில் சிறிலங்கா அரசாங்கம் நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு. இதற்கான பூர்வாங்க வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இதன்முன்னோடி நடவடிக்கையாக வாஷிங்டனில் எதிர்வரும் 14ஆம்திகதி நடைபெறவுள்ள சமாதான ஆதரவு மாநாடு உள்ளது.

சிறிலங்கா தற்பொழுது பெறும் நிதியுதவிகள் யாவும் நாட்டில் தோன்றியுள்ள சமாதான சூழலை அடியொற்றியதாகவே உள்ளது. அதாவது, சமாதானத்தின் மீது செய்யப்படும் முதலீடாகவே கொள்ளத்தக்கதாகும். இந்தவகையில் இந்நிதியுதவிகளை தீர்மானிப்பவர்களாக விடுதலைப் புலிகளும் உள்ளனர் என்பதே உண்மையாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இவ்விடயத்தில் எத்தனை தூரம் விசுவாசமாகவும், நேர்மையாகவும் செயற்படுகின்றதா என்பது கேள்விக்குரியதொன்றே. அதாவது நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வரையில் சமாதான முயற்சிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அளிக்கும் முக்கியத்துவம் நிதியுதவி கிட்டிய பின்பும் நீடிக்குமா என்பது தீவிரமாகக் காணப்படவேண்டியதொரு விடயமாகவே உள்ளன. ஏனெனில் அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் இச்சந்தேகங்களைத் தீவிரப்படுத்துபவையாக உள்ளன.

இதில் முதலாவதாக, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இதுவரை காணப்பட்ட இணக்கப்பாடுகள் / உடன்பாடுகள் என்பனவற்றை நிறைவேற்றுவதில் அரசாங்கம் தீவிர அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. ஒருவருடம் ஆகிவிட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டில் அமுல்செய்யப்படாத விடயங்கள் பல இன்னமும் உள்ளன. அதுமாத்திரமல்ல யுத்தநிறுத்தத்தை மீறும் ஆயுதப்படைகளின் நடவடிக்கைகளும் உள்ளன.

அடுத்ததாக அமெரிக்காவில் ஏப்ரல்–14இல் நடைபெறவுள்ள சமாதான ஆதரவு மாநாட்டிற்கு புலிகள் அழைக்கப்படாமையும் அதில் சிறிலங்கா அரசாங்கம் அக்கறை காட்டாமையும் அரசாங்கம் சமாதான முயற்சிகளில் இதயசுத்தியுடன் செயற்படுகின்றதா? என்ற கேள்வியை எழுப்புகின்றது. அதாவது சமாதானத்தின் பங்குதாரர்களாக புலிகள் இருக்கையில் புலிகளுக்கு இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்கான அழைப்பு விடுக்கப்படவில்லை. அத்தோடு, சிறிலங்கா அரசாங்கமும் அதில் அக்கறை காட்டவில்லை.

அடுத்ததாக அரசாங்கம் தன் இஷ்டத்திற்கு ஏற்ப வெளியிடும் தகவல்கள் சமாதான முயற்சிகளுக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் உகந்தவையாகவும் இல்லை. இந்தவகையில் தற்பொழுது அரசாங்கம் சமாதான முயற்சிகள் குறித்து சர்வசனவாக்கெடுப்பொன்றை நடத்துவது குறித்து பரிசீலித்துவருவதாக வெளியிட்டுள்ள அறிவிப்பைச் சுட்டிக்காட்ட முடியும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அன்றி அவரது ஐ.தே.முன்னணி அரசாங்கமோ சிலவேளைகளில் இத்தகைய விடயங்களைத் தமது வெற்றிகரமான இராஜதந்திர நடவடிக்கைகளாகச் கருதமுனையலாம். இதற்காகப் பெருமைப்பட்டுக் கொள்ளவும்கூடும். ஆனால் இவைகளில் நீடித்த அமைதிக்கும், சமாதானத்திற்கும் இத்தகைய அணுகுமுறைகள், முயற்சிகள் வெற்றியைத் தேடித்தரமாட்டாது.

# இலங்கை சமாதான முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்

### ஐரோப்பிய சமூகத்தின் 15 நாடுகள் அறிவிப்பு

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத்தயாராக இருப்பதாக ஐரோப்பிய சமூகத்தின் 15 நாடுகளும் அறிவித்துள்ளன. ஐரோப்பிய சமூகத்தின் உயர் அதிகாரி இத்தகவலைத் தெரிவித்துள்ளார். சமீபத்தில் மிலிந்த மொறகொட ஐரோப்பிய சமூக அதிகாரிகளைச் சந்தித்து உரையாடியுள்ளார். ஈராக் யுத்தம் காரணமாக இலங்கையின் சமாதான முயற்சிகள் எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டாது எனவும், சமாதான முயற்சிகளுக்கு ஐரோப்பிய சமூகம் தொடர்ந்தும் உதவி வழங்கும் என அவர் உறுதியளித்துள்ளார்.

### –ஆயிரம் தொண்டராசிரியர்களுக்கு–

# நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து 10 ஆம் திகதிக்கு முன் முடிவெடுக்கப்படும்

வட-கிழக்கில் 1000 தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து எதிர்வரும் 10ம் திகதிக்கு முன்னர் முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு கூறியுள்ளார்.

தமிழர் ஆசிரியர் சங்க தூதுக் குழுவினருடன் தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த 06 பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன் தலைமையில் நேற்று முன்தினம் கல்வியமைச்சரைச் சந்தித்துப் பேசியுள்ளனர். இச்சந்திப்பில் கல்வியமைச்சர் க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த 1000 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் மிக விரைவில் கோரப்படும் எனவும் ஆசிரியர் சேவையில் உள்ள வயதெல்லையை நீக்குவது சம்பந்தமாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் உறுதியளித்ததாக தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

### தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கிடையேயான

# பெருவிளையாட்டுப்போட்டியில் வவுனியா முதலிடம் பெற்றது

(வவுனியா செய்தியாளர்)

இலங்கையில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கிடையேயான பெருவிளையாட்டுப் போட்டியில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி முதலிடம் பெற்றது.

இலங்கையில் உள்ள 15 தேசிய கல்வியியற் கல்லூரிகள் பங்குபற்றிய 10 ஆவது பெருவிளையாட்டுப்போட்டி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு.க.பேர்ணாட் தலைமையில் நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டியில் உதைபந்தாட்டம், கிறிக்கெற் ஆகிய இரு பெருவிளையாட்டுக்களிலும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியே வெற்றி பெற்றது.

உதைபந்தாட்டத்தின் இறுதிப் போட்டியில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி அணியும், றுகுணு தேசிய கல்வியியற் கல்லூரி அணியும் மோதின. இதில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி அணி 2-0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

5 ஓவர் கொண்ட கிறிக்கெற் சுற்றுப் போட்டியில் நாணயச் சுழற்சி மூலம் வெற்றியீட்டிய வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி அணி 2 விக்கெற் இழப்பிற்கு 56 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நில்வள தேசிய கல்வியற் கல்லூரி அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 23 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. (10)



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கு பிரதம விருந்தினராக வருகை தந்த தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பிரதம ஆணையாளர் ஜனாப். A.C.M இப்ராகிம் அவர்களுக்கு பீடாதிபதி திரு.க.பேர்ணாட் நினைவுக் கேடயம் வழங்குகின்றார். படப்பிடிப்பு: ஆ.சுபாஸ்கரன்

## புதுவருட தின விளையாட்டுப்போட்டி

வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்திவரும் மாபெரும் விளையாட்டுப் போட்டி இவ்வருடமும் நடைபெறவுள்ளது.

வரும் 14.ஆம் திகதி வருடப் பிறப்பன்று காலை நிகழ்வாக மரதன் ஓட்டமும் மாலை நிகழ்வாக நந்திக்கடல் வெளியில் மாட்டுவண்டிச் சவாரி, உழவு இயந்திரப் பெட்டி கொழுவுதல் போட்டியும் நடைபெறவுள்ளன. (ஆ)

# அம்பலவன்போக்கணையில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

முல்லை. மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து சித்திரை தமிழ் புத்தாண்டில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை நடத்தவுள்ளது.

இது அம்பலவன்பொக்கணை விளையாட்டுத்திடலில் பி.ப 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் பங்குகொள்ளவிரும்பும் விசுவமடுப் பிரதேச போட்டியாளர்கள் 08-04-2003 இற்கு முன்னதாக பதிவுகளைச் செய்யுமாறு இப்பிரதேச பொருண்மிய மே. நிறுவன இணைப்பாளர் து.சிறிதரன் கேட்டுள்ளார். பதிவுகள் யாவும் விசுவமடு செயலகத்தில் நடைபெறும் என இணைப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (19)

# குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்குப் பயிற்சி


குடிவரவு. குடியகல்வு அதிகாரிகளுக்கு விசேட பயிற்சிகள் வழங்க சிறிலங்கா அரசு முடிவெடுத்துள்ளது.


நவீன உபகரணங்களைக் கையாள்வது மற்றும் சர்வதேச சட்டங்கள் தொடர்பாகவும் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதன்மூலம் சிறிலங்காவின் குடி வரவு குடியகல்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பாக்தாத் விமான நிலையத்தில் சண்டை தொடர்கிறது; ஒருபகுதி அமெரிக்கப்படைகளின் வசமானது!

தலைநகர் பாக்தாத்திற்கு தென்கிழக்காக அமைந்துள்ள சதாம் சர்வதேச விமான நிலையத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க படையினருக்கும், ஈராக் படையினருக்கும் இடையில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.





பாக்தாத் விமான நிலையத்தில் ஒரு பகுதியில் அமெரிக்க டாங்கி தரித்து நிற்பதையும் விமானநிலையத்தின் செய்மதிப்படத்தையும் மேலுள்ள படங்களில் காணலாம்

விமான நிலையத்தின் பெரும் பகுதியைத் தாங்கள் கைப்பற்றி விட்டதாகவும் ஆனால் விமான நிலையத்திற்குள் இருந்து ஈராக்கிய படையினர் அமெரிக்கப் படையினர் மீது தாக்குதல் நடத்தி வருவதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்க படையினர் பாக்தாத்தின் முக்கிய விமான நிலையத்தை அடைந்து விட்டதை ஒப்புக்கொண்டுள்ள ஈராக்கிய தகவல்துறை அமைச்சர் விமான நிலையத்தில் உள்ள அமெரிக்கத் துருப்புக்கள் தங்களது படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும், பிற அமெரிக்கப் படையினரிடம் இருந்து விமான நிலையத்தில் இருக்கும் அமெரிக்கப் படைகள் துண்டிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

அமெரிக்கப் படையினருக்கு எதிராக ஈராக் பாரம்பரிய முறையில் அல்லாது நடவடிக்கை எடுக்கக்கூடும் என்றும் தகவல்துறை அமைச்சர் கூறினார்.

இதனிடையே பாக்தாத் நகரை ஈராக்கின் பிற பகுதிகளில் இருந்து தனிமைப்படுத்துவது பாக்தாத் நகரின் உயிர்நாடியாய் விளங்கும் முக்கியமான பாதைகளை துண்டிப்பதாகும்.

ரைகிறிஸ் நதியின் ஊடாக முன்னேறும் அமெரிக்க மரேன் படையினருடன் இணைந்து பயணிக்கும் பி.பி.சி.செய்தியாளர் அமெரிக்கப்படையினர் கடும் போரினை எதிர்கொண்டதாகவும் பல ஈராக்கிய பீரங்கிகள் தீப்பற்றி எரிந்ததாகவும் கூறினார்.

தெற்குப் பகுதிகளில் இருந்து, பாக்தாத்தை அடையும் பாதைகளில் ஐந்து மணி நேரத்துக்கு மேலாக நேற்று மோதல்கள் நடைபெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மட்டு. மாவட்டத்தில் 700 போராளிகள் பயிற்சி முடித்து வெளியேற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் 55ஆவது பயிற்சிப் பாசறையில் இருந்து 400 ஆண் போராளிகளும், 30 ஆவது பயிற்சிப் பாசறையில் இருந்து 300 பெண் போராளிகளும் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.



நேற்று முன்தினம் மட்டக்களப்பு தரவை மத்திய பயிற்சிப் பாசறையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் அவர்கள் ஏற்றிவைத்து. பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறிய போராளிகளைப் பாராட்டிக் கௌரவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், மட்டு-அம்பாறை மகளிர் படையணிப் பொறுப்பாளர் நிலாவினி மற்றும் தளபதிகள். போராளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## வாஷிங்டன்....

அபிவிருத்தியிலும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. ஜப்பான் பேச்சுவார்த்தையிலும் இவ்விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கின்றது.

அத்தோடு தமிழர் பகுதியில் நடக்கும் அபிவிருத்தி, புனரமைப்பு விடயங்கள் விடுதலைப்புலிகள் இல்லாமல் நடத்துவது சாத்தியமற்றதெனவும் இச்செயல் தமிழ் மக்களின் நம்பிக்கையைக் கெடுப்பதும் ஆகும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கடற்படை...

ருந்தது. இது தொடர்பாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொதுமுகாமையாளர் சிறிலங்கா கடற்படையினரின் இந்த அனுமதி அட்டை நடைமுறை பற்றிய அறிவிப்பானது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும், இது ஆயிரத்துக்கும் அதிகமான கடற்றொழிலாளர்களை நேரடியாக பாதிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

## 60 லட்சம்...

வதுடன், வன்னி, திருகோணமலை கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்து வசிப்பவர்களுக்கும் நிதியுதவி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மூன்று அமெ. படையினர் பலி!

மேற்கு ஈராக்கில் அமைக்கப் பட்டிருந்த அமெரிக்க கூட்டுப் படையின் சோதனைச் சாவடி ஒன்றில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் மூன்று அமெரிக்கப் படையினர் உட்பட ஐவர் பலியாகினர். மேலும் இரண்டு படையினர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் காரைச் செலுத்தி வந்தவரும் மற்றொரு கர்ப்பிணிப் பெண்ணும் பலியாகினர். இப்பெண்ணும் காரில் வந்தவரே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஈராக்கிய தகவல் அமைச்சர் சகாவ் தெரிவிக்கையில், "மரபுசாராத நடவடிக்கை ஒன்று அமெரிக்கப் படைகள் மீது எடுக்கப்படும். கூலிப்படைகளுக்கு சிறந்ததொரு உதாரணமாக அமையும் வகையில் நாம் அதனை மேற்கொள்வோம்" என்றார். அந்த நடவடிக்கைக்கு ஈராக் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பாவிக்குமா? எனக் கேட்டதற்கு "அப்படியல்ல, நாங்கள் பெரிய தியாகத்துடன் கூடிய நடவடிக்கையை மேற்கொள்வோம்" எனத் தெரிவித்தார்.

## அரசாங்கத்தின்...

புப் பற்றிய அறிவிப்பை சிறிலங்கா அரச தரப்பு விடுத்திருப்பது எமக்கு வியப்பைத் தருகிறது எனத் தெரிவித்தார்.

இவ்வாறான வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு தமிழர் தரப்பு வரவேற்கும் நிலையில் இன்று இல்லை. பத்து இலட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் நாட்டை விட்டு புலம்பெயர்ந்துள்ளனர். நாட்டுக்குள்ளேயே மேலும் பல இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களெல்லாம் இத்தகைய பொதுசன வாக்கெடுப்பில் பங்குகொள்ளும் நிலையில் இல்லை.

நிலைமை இப்படி இருக்கையில் இவ் வாக்கெடுப்பானது எவ்வாறு நீதியான தீர்வைத் தரும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான இறுதியான தீர்வு எதனையும் நாம் காணவில்லை அடிப்படை விடயங்கள் குறித்து ஆழமாக நாம் இன்னும் பேசக்கூடத் தொடங்கவில்லை. ஆக சமஷ்டிக் கட்டமைப்பின் பூர்வாங்க அடிப்படை குறித்தே ஓர் இணக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த சமஷ்டி எத்தகையது. அதன் பரிமாணங்கள், கட்டமைப்புகள் எவை? அதன் அதிகார வரம்புகள் எல்லைகள் எவை, எவை என்பது குறித்தெல்லாம் நாம் இன்னமும் பேசத் தொடங்கவில்லை. இந்த நிலையில் சமாதானத் தீர்வு முயற்சி குறித்து பொதுசன வாக்கெடுப்பு நடாத்தி நாம் என்ன காணப் போகின்றோம் எனக் கேள்வி எழுப்பிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தல் பற்றிய புரளி ஒன்று தெற்கில் கிளம்பியுள்ளது. இதுபோன்று அங்கு கிளம்பும் அரசியல் பூதங்களைச் சமாளிப்பதற்கு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு சமாதான நடவடிக்கைகளின் போக்கை அதற்கு பயன்படுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

## படையினரின்...

கப்பட்டதற்கு அமைவாக திட்ட வரைபுகள் தயாரிப்பது பற்றியும் உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றத்தில் பெண்களின் முக்கிய பிரச்சினை தொடர்பாகவும் ஆராயப்பட்டன. அத்துடன் மனநிலை பாதிக்கப்பட்ட பெண்களின் பிரத்தியேகப் பிரச்சினைகள் பற்றியும் சிறிலங்காப் படையினரின் தடைமுகாங்கள், சோதனைச் சாவடிகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன.

பெண்கள் விவகாரங்களுக்கான இரண்டாவது உபகுழு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சிறிலங்கா விமானப்படையினரின் உலங்குவானூர்திமூலம் நேற்றுக்காலை 9.20 மணிக்கு கிளிநொச்சிக்கு வருகைதந்த அரச தரப்புப் பிரதிநிதிகளான டாக்டர் குமாரி ஜெயவர்த்தனா, குமுதினி சாமுவேல், வசுன் சக்காரியா, டாக்டர் பசிலா ரியாஸ் ஆகியோரையும் அனுசரணையாளராக செயற்படும் நோர்வேப் பிரதிநிதிகளையும் தமிழீழ மகளிர் அரசியல்துறையைச் சேர்ந்த மதி மற்றும் பெண் போராளிகள் வரவேற்றுள்ளனர்.

முதலாவது உபகுழு மாநாட்டில் கலந்துகொண்ட டாக்டர் தீபிகா உடகம நேற்றுக் கலந்துகொள்ளவில்லை. இதேவேளை பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழுவின் இரண்டாவது நாள் சந்திப்பு இன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்றுகாலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள இச்சந்திப்பில் நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட அரச தரப்பு பிரதிநிதிகளும் புலிகள் தரப்பு பிரதிநிதிகளும் கலந்துகொள்வர்.

இன்று நடைபெறவுள்ள சந்திப்பின் நிறைவில் இரு தரப்பினரும் இணைந்து இருநாள் கலந்துரையாடல் பற்றிய செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டு வைக்கவுள்ளனர். (பா.சோ)

## கண்ணிவெடி...

ளர் யோகன், வடக்கு- கிழக்கு மாகாண இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க இணைப்பாளர் சிவநாதன் கிசோர் உட்பட பலர் கலந்துகொண்டு கண்ணி வெடி அகற்றும் பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர். (10)


## நேர்முகத் தேர்வு

தருமபுரம் தமிழரன் கணினி பயிற்சி நிலையத்தின் கணினி கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு 06.04.2003 (ஞாயிறு) பி.ப.2.00 மணிக்கு கிளி/தருமபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

**குறிப்பு :** சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் வருகை தரவும்.

**தமிழீழ மாணவர் அமைப்பு,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(3064)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.